**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 521/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதீஷ் கண்ணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ராமேஸ்வரன் | தொழில் | : | பேங்க் மேனேஜர் |
| கிராமம் | : | இராஜபாளையம் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 29.07.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் இராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பேங்க் மேனேஜராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. 14.02.2015 ம் தேதி நான் சங்கரன்கோவில் ஏவிகே தனியார் பள்ளியில் நான் கராத்தே மாஸ்டராக பணியில் இருந்தபோது, காலை 10.30 மணிக்கு ஏகேடிஆர் கல்லூரி பேருந்து விபத்து நடந்த இடத்தை நான் பார்க்க போனேன். நான் அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி  கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 14.02.2015ம் தேதி, காலை 10.30 மணிக்கு போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு கருப்பசாமி வீட்டின் பக்கம் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், வெங்கடேஷ், பாபு என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. பின்னர் அன்றைய தினம் 11.30 மணிக்கு சம்பவயிடத்தில் வைத்து கல் ஒன்றை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள்  என்றால் சரியல்ல. மேற்படி அத்தாட்சி மற்றும் பார்வை மகஜரில் நானும், வெங்கடேஷ் பாபு என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.30 17:43:55 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 521/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-9</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | தொழில் | : | மோட்டார் வாகனஆய்வாளர் (பணி ஓய்வு) |
| கிராமம் | : | மதுரை | வயது | : | 64 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 29.07.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 17.02.2018 ம் தேதி சங்கரன்கோவில் தாலுகா சார்பு ஆய்வாளர் வேண்டுகோளுக்கிணங்க அன்றைய தினம் TN 84 A 1578 என்ற பதிவெண் கொண்ட கல்வி நிறுவன வாகனத்தை ஆய்வு செய்தேன். வாகனத்தின் முன் பக்க கண்ணாடி உடைந்து காணப்பட்டது. வாகனத்தின் முன் இடது பக்க கார்னர் பகுதி உடைந்திருந்தது. வாகனத்தின் இடது பக்க முன்பகுதியிலிருந்து முன் புட் போர்டு வரை உடைந்திருந்தது. முன் புட் போர்டு உடைந்த நிலையில் வளைந்து காணப்பட்டது. இடது பக்க ஜன்னல் கண்ணாடிக்கு மேலுள்ள சீ துரு க்ளாஸ் ஒன்று உடைந்த நிலையில் காணப்பட்டது. அதற்காக ஆய்வறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய ஆய்வறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் காவல்நிலையத்தில் வைத்து தான் வாகனத்தை ஆய்வு செய்தேன். கண்ணாடி உடைந்தால் பஸ்சிற்குள் அதன் பகுதிகள் விழும் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.30 17:44:03 +0530